රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකථන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය எனது இல My No } CS/ICTS/01/නව බඳවා ගැනීම
ඔබේ අංකය உமது இல Your No }
දිනය திகதி Date } 2020.10.13

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்களுக்கும்

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II இற்காக 2020.03.16 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடமையை பொறுப்பேற்ற திகதி**

மேற்படி விடயம் தொடர்பாக இவ்வமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம் R/DO/PER.APP/2020 மற்றும் 2020.05.04 திகதி கடிதம் தொடர்பானது.

02. அக் கடிதத்தின் பந்தி 04(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II இற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களைக் குறிப்பிட்ட அவ் ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் PSC/EST/05-05/05/2018 மற்றும் 2020.09.17 ஆம் திகதி கடிதத்தின் ஏற்பாடுகளை பின்வருமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. எனது 2020.02.24 ஆம் திகதி நியமனக் கடிதத்தின் ஊடாக 2020.03.16 ஆம் திகதியில் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II இற்காக நியமிக்கப்பட்டிருந்த, 2020.06.17 திகதி அல்லது அதற்கு முன்பு வெவ்வேறு திகதிகளில் கடமையை பொறுப்பேற்ற சகல உத்தியோகத்தர்களின் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி 2020.03.16 என கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. அவ் உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு மற்றும் சேவைமூப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொள்வதற்கு மட்டும் 2020.03.16 முதல் 2020.06.17 திகதி வரையிலான காலகட்டத்தை முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலமாகக் கருதுதல்

III. மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டம் தொடர்பாக (கடமையை பொறுப்பேற்பதற்காக அறிக்கையிடாத) நிலுவைச் சம்பளம் பெற அவர்கள் உரித்துடையவர்களாகமாட்டார்கள்

03. இது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு தயவுடன் அறியப்படுத்தவும்.

**ஒப்பம்: எஸ். ஆலோகபண்டார**
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்